12 JUL 2010
சேப்பாக்கம், சென்னை-5

2

## சுருக்கம்

2010ஆம் ஆண்டு காமராசர் பிறந்த நாளான ஜுலை 15–ஐ "கல்வி வளர்ச்சி நாள்" விழாவாக அனைத்து பள்ளிகளிலும் விழா எடுத்தல் மற்றும் விழா செலவினம் அனுமதித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (என்) துறை

அரசாணை (நிலை ) எண். 184 நாள்:07.07.2010

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (நிலை) எண்.72, பள்ளிக் கல்வி, நாள்.24.5.2006.
2) அரசாணை (நிலை) எண்.158, பள்ளிக் கல்வி, நாள். 03.07.2009.
3) பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.37773/எம்/இ–2/2010, நாள் 03.05.2010
4) தொடக்கக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.16021/J3/2010, நாள் 24.05.2010.

**~~~~**

ஆணை:–

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசு ஆணையில், தமிழ் நாட்டில் கல்லாமை இருளை நீக்கப் பள்ளிகள் பல திறந்து கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுக் கல்விக் கண் திறந்த காமராசர் பிறந்த நாளான ஜுலைத் திங்கள் 15–ஆம் நாளை "கல்வி வளர்ச்சி நாள்" என அரசு அறிவித்தும், அந்நாளில் பள்ளிகளில் மாணவர்கள் புத்தாடை அணிந்து, விழா எடுத்து காமராசர் திருவுருவப்படத்தை அலங்கரித்து மகிழ்ச்சியுடன் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும் இவ்விழா அப்பள்ளி ஆசிரியர்கள் மேற்பார்வையில் நடப்பது சிறப்பாக இருக்கும் என்றும் அதற்காகும் செலவை பள்ளிக் கல்வித் துறை ஏற்கும் என்றும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் இந்த ஆண்டு 15.7.2010 அன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அனைத்து பள்ளிகளும் பல்வகையான போட்டிகள் நடத்தி விழா கொண்டாடவும், மேலும் விழா செலவினங்களுக்காக பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து ரூ.24,58,200/–(ரூபாய் இருபத்தி நான்கு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து இருநூறு மட்டும்) செலவினம் மேற்கொள்ளவும் அரசு நிதி ஒதுக்கீடாக ரூ.13,70,050/– (ரூபாய் பதிமூன்று இலட்சத்து எழுபதாயிரத்து ஐம்பது மட்டும்) வழங்குமாறும், ஆணை வேண்டியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:

| வ.எ | பள்ளிகளின் எண்ணிக்கை | அரசு சார்பில் வழங்க கோரும் நிதி ஒதுக்கீடு ரூ. | ஒரு பள்ளிக்கு பெற்றோர் ஆசிரியர் கழகத்திலிருந்து செலவினம் மேற்கொள்ளப்பட உள்ள தொகை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | அரசு உயர்நிலைப் பள்ளிகள் **2067** | 200 (ரூ.200x2067= 4,13,400) | 300 (ரூ.300x2067 =6,20,100) | 10,33,500 |
| 2. | அரசு நிதி உதவிப் பெறும் உயர்நிலைப் பள்ளிகள் **632** | 200 (ரூ.200x632= 1,26,400) | 300 (ரூ.300x632= 1,89,600) | 3,16,000 |

(த.செ.தி.)

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | நகராட்சி / மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் 120 | 200 (ரூ.200x120= 24,000) | 300 (ரூ.300x120= 36,000) | 60,000 |
| 4. | அரசு மேல்நிலைப் பள்ளிகள் 2000 | 250 (ரூ.250x2000= 5,00,000) | 500 (ரூ.500x2000= 10,00,000) | 15,00,000 |
| 5. | அரசு நிதி உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள் 1120 | 250 (ரூ.250x1120= 2,80,000) | 500 (ரூ.500x1120= 5,60,000) | 8,40,000 |
| 6. | நகராட்சி / மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகள் 105 | 250 (ரூ.250x105= 26,250) | 500 (ரூ.500x105= 52,500) | 78,750 |
| | மொத்தம் 6044 | 13,70,050 | 24,58,200 | 38,28,250 |

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழகத்திலுள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் இவ்விழாவினை கொண்டாடுவதற்கு பள்ளி ஒன்றுக்கு ரூ.250/– வீதம் 37,970 பள்ளிகளுக்கு வழங்கும் பொருட்டு ரூ.94,93,000/– (ரூபாய் தொண்ணூற்றி நான்கு இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு வழங்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3) பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் ஆகியோரது கருத்துருவினை ஏற்று, பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான 15.7.2010–னை கல்வி வளர்ச்சி நாளாக அனைத்து பள்ளிகளிலும் கொண்டாடவும், இவ்விழாவிற்கான செலவினத்தை பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து ரூ.24,58,200/–ம் பெற பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்தும், அரசு ஒதுக்கீடாக ரூ.1,08,63,000/–ம் (உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.13,70,000/–ம் மற்றும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.94,93,000/–ம்) ஒப்பளிப்பு செய்யலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

4) மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>பள்ளிக் கல்வி இயக்ககம்</u>

2202 – பொதுக் கல்வி – 02 – இடைநிலைக் கல்வி – 800 – ஏனைய செலவு – I திட்டத்தில் சேராதது – AP – காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடுதல் – 05 – அலுவலகச் செலவுகள் – 02 – ஏனைய சில்லறைச் செலவுகள்
(த.தொ.கு. எண்.2202 – 02 – 800 – AP– 0522)

Rs.13,70,000/-

<u>தொடக்கக் கல்வி இயக்ககம்</u>

2202 – பொதுக் கல்வி – 01 – தொடக்கக் கல்வி – 800 – ஏனைய செலவு – I திட்டத்தில் சேராதது – AZ – காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடுதல் – 05 – அலுவலகச் செலவுகள் – 02 – ஏனைய சில்லறைச் செலவுகள்
(த.தொ.கு. எண்.2202 – 01 – 800 – AZ – 0523)

Rs. 94,93,000/–

(த.செ.தி.)

5) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 295/JS(APA)/2010, நாள்06.07.2010–இல் பெறப்பட்ட அத்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை–6.
திட்ட அலுவலர், அனைவருக்கும் கல்வி திட்டம், சென்னை–6.

நகல்

முதன்மைச் செயலாளர், நிதித் துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் (ம) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம்(ம) குடிநீர் வழங்கல் துறை,சென்னை–9.
முதன்மைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி அறநிலையாளர்கள் (ம) செய்தித் துறை, சென்னை–9.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, நந்தனம், சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), நந்தனம், சென்னை–35.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18 /35.
இயக்குநர், கல்லூரிக் கல்வித் துறை, சென்னை–6.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் (ம) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை–5.
இயக்குநர், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5.
இயக்குநர், நகராட்சி நிர்வாகம்(ம) குடிநீர் வழங்கல் துறை,சென்னை–5.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை – 9.
முதுநிலை உதவியாளர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அலுவலர், சென்னை–9.
நிதி (கல்வி–II) / (வ.செ.பொ–II)துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

08.07.2010
பிரிவு அலுவலர்.